# THE CREATIVE ART WORKS IN THE SKILL EXPRESSION OF THE DIFFERENTLY ABLED PEOPLE: A STUDY BASED ON PUHALIDAM, THE ORGANIZATION FOR DIFFERENTLY ABLED PEOPLE

Mr. S. Chandrakumar[1], Miss. Fathima Sharfin[2]

[1] Senior Lecturer, Head, Department of Fine Arts, Eastern University, Sri Lanka. Vantharumoolai

[2]Department of Fine Arts, Eastern University, Sri Lanka. Vantharumoolai

**Abstract**

In the society, there are various factors that determine the issues of an individual, related to society and mental aspects such as family environment, educational environment, friends, age differences, transfers or change of place, occupation, traditions, responsibility, requirements, purpose as well as physical environment. Even though the above factors make a huge impact among the normal people in the society, it should be carefully considered about how these factors will influence the differently abled people who are with special needs. The aspects such as how can we make the normal community as well as the community of differently abled people understand about these measures, and the right media to communicate about this will be shared through the creative art works. There are variety of special needs people. Their skills, talents and weaknesses are different from one another. Therefore, we can develop the differently abled people with the focus of reducing their inabilities and making them to face the society with greater personality through helping them to bring their hidden skills and talents out as well as by enhancing their creative and aesthetic skills they possess. Based on the above factors, this participatory study is established on the creative art works of the differently abled people of the Organization for differently abled named Puhalidam.

**Keywords:** The persons with special needs, Differently abled people, the media of art, creative aesthetics, creative art works.

## அறிமுகம் (Introduction)

உலகில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரியான உருவ அமைப்பையோ (உடல்) அறிவையோ (உளம்) பெற்றிருப்பதில்லை. மனிதர் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பல்வேறு வேறுபாடுகளைக் கொண்டு காணப்படுகின்றான. அதனடிப்படையில் அனைவரும் சமமானவர்களே. சமூகத்தில் சாதாரண மனிதர்களைப் போல் வாழ்வதற்குச் சிரமப்படும் விஷேட தேவையுடையவர்கள் குறித்து கவனம் செழுத்துவது முக்கிய அம்சமாகும். ஒரு ஆரோக்கியமான பிள்ளையால் இயல்பாகச் செய்யக்கூடிய செயல்களைச் செய்வதில் பிரச்சினையையும் சிரமங்களையும் எதிர்கொள்வோர் என விஷேட தேவையுடைவர்களை எளிமையாக வரையறுக்கலாம்.

விஷேட தேவையானது உடற் குறைபாடு, உளக் குறைபாடு, புலன் குறைபாடு, பிற நோய்கள் தொடர்பான குறைபாடுகளைக் கொண்டு வகைப்படுத்தப்படுகிறன. இவர்களுக்கு அவர்களின் குறைபாட்டிற்கு ஏற்ப விஷேட தேவை ஏற்படலாம். விசேட தேவையுடையவர்களின் தேவைகள் என்பது தனிப்பட்ட ஒருவரோடு மட்டும் தொடர்புடையதல்ல. மாறாக அத்தனிநபர் சார்ந்த குடும்பம், சமூகத்தோடு தொடர்புபடுத்தி பார்க்கப்பட வேண்டிய அம்சமாகும். (மகேசன்: 2010: …..) விசேட தேவையுடையவர்கள் பற்றிய சரியான அவதானம் மக்கள் மத்தியில் காணப்படாமையினால் பெற்றோராலும் பிறராலும் அவர்களுடன் இணைந்த சமூகத்துடன் சமூகமயமாக்கல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவது கடினமான செயலாகவுள்ளது. சமூகத்தில் இருந்து ஒதுக்கப்பட்டவர்களாகவும் கருதப்படுகின்றனர். ஆகவே, இவர்களை குடும்பத்தினரின் அன்பும், அரவணைப்பும் சமூகம் அவர்களைச்

சரியான வழிகாட்டி வாயிலாகவும் கலைச் செயற்பாடுகளின் ஊடாகவும் விஷேட தேவையுடையவர்களைச் சிறப்பான முறையில் சமூகமயமாக்கிக் கொள்ளலாம் என்ற வகையில் இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

**இலக்கிய மீளாய்வு (Literature review)**

மாற்றுத்திறனாளிகளின் திறன் வெளிப்பாட்டில் கலைப்படைப்புக்கள்: மட்டக்களப்பு புகலிடம் மாற்றுத்திறனாளிகளுக்கான அமைப்பை மையப்படுத்திய ஆய்வு ஏற்கனவே வெளியான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத் தகவல்கள் ஆகியவற்றை உள்ளடக்குவதாக இவ்விலக்கிய மீளாய்வு காணப்படுகிறது.

விசேட தேவையுடையவர்களின் குறைபாடுகள் பற்றி கூறப்படும் போது ஒரு மனிதரின் ஓர் அவயம் சாதாரண மனிதனுக்கு இருக்க வேண்டிய அந்த அவயத்தின் தொழிற்பாடு அல்லது அமைப்பு அல்லது தொழிற்பாடு அமைப்பு இரண்டிலும் வேறுபட்டிருந்தால் அது குறைபாடு எனப்படும். எனின் சாதாரண மனிதன் என்றால் யார் என்ற வினா எழுகிறது. உலக சுகாதார தாபனத்தால் வெளியிடப்பட்டுள்ள "இயலாமை மற்றும் ஆரோக்கியம் தொடர்பான சர்வதேச வகைப்படுத்தல்"*(ICFDH)* என்ற நூலில் இதற்கான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அந்நூலில் மனிதரின் சாதாரண ஆரோக்கியமான அவயங்கள் ஒவ்வொன்றினதும் அவை செய்ய வேண்டிய தொழிற்பாடுகள் பற்றியும் காட்டப்பட்டுள்ளன. அவ்வாறு காட்டப்பட்டுள்ள அவயமொன்றின் அமைப்பு, தொழிற்பாடு அல்லது அமைப்பு, தொழிற்பாடு இரண்டிலும் ஒருவரின் அவயம் வேறுபட்டிருந்தால் அது ஒவ்வொரு விஷேட தேவையுடையவர்களின் குறைபாடுகள் எனக் குறிப்பிடப்படுகிறது.

விசேட தேவையுடையவர்கள் இயலாமையை பற்றி 2017 ஆண்டு ஐக்கிய நாடுகளின் இயலாமையுடன் கூடிய நபர்களின் உரிமைகள் சாசனம் *(UNCRPD)* இயலாமை என்பதை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றது. "மற்றவர்களுடன் ஒரு சமத்துவ அடிப்படையில் சமூகத்தில் தங்களின் முழுமையான மற்றும் வினைத்திறனான பங்குபற்றலை தடுக்கக் கூடியதும் ஆட்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை மட்டுப்படுத்தக் கூடியதுமான பல்வேறு தடைகளுடன் இடைவினைத் தாக்கமுள்ள நீண்ட கால உடல், உளம் ரீதியான தாக்கத்தின் வெளிப்பாட்டினை கூறலாம்.

மீத்திறனுடைய மாணவர்கள் தொடர்பான விளக்கத்தில் மீத்திறனும் திறமையும் கொண்ட பிள்ளைகள் தொழில் ரீதியான தகமையற்ற நபர்களினால் அடையாளங் காணப்படுகின்றனர். இப்பிள்ளைகளில் அதீத ஆற்றலும் உயர் செயலாற்றலுமே இவர்களை இனங்காண உதவுகின்றன.அவர்களது ஆற்றல் அவர்களுக்கும் சமூகத்திற்கும் பயன்பட வேண்டுமெனில் பாடசாலையின் வழமையான செயற்பாடுகளுக்குப் புறம்பாக விஷேட கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதனை விஷேட நிலமைகள் மற்றும் கற்றல் தேவைக்கான அறிமுகம் என 2007ம் ஆண்டு வெளியிடப்பட்ட நூலில் குறிப்பிடப்படுகின்றது.

சீரிய சிந்தனை என்னும் நூலில் விசேட கல்வியின் அறிமுகம், விஷேட கல்வி என்றால் என்ன, விசேட தேவையுடையோர் யார், இலங்கையில் விசேட தேவையுடையோரின் வகைப்பாடு, மனநலம் குன்றியவர்களின் வகைகள், புலன்கள் குறைபாடுடையவர்கள், விஷேட கல்வியின் தோற்றமும் வளர்ச்சியும், மெதுவான உள வளர்சியுடைய பிள்ளையின் ஒரு ஆசிரியரின் பங்களிப்பு ஆகியவை பற்றி குறிப்பிடப்படுகின்றது. நடத்தை மனப்பாங்கு திறன் தொடர்பாக பின்தங்கிய மாணவர்களும் விஷேட தேவையுடைய மாணவர்களாக உள்ளனர். மாணவர்களை பொறுத்த வரையில் ஒவ்வொரு பிள்ளைகளும் பல்வேறு இலக்குகளையும் எதிர்பார்ப்புக்களையும் கொண்டிருக்கிறது. தன் இலக்குகளை சமூகம் ஏற்கும் வரை அடையா விட்டால் மனமுறிந்து பிழையான நடத்தை கொண்டவராக உருவாகச் சந்தர்ப்பம் அதிகமாகவே உள்ளது. இந்நிலையில் நடத்தை மனப்பாங்கு திறன்களில் பின்னடைந்த மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான சிகிச்சைகளை

பெற்றுக்கொடுப்பது அவசியமானது. விஷேட தேவையுடையோரின் வகைப்பாடானது நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. நமது நாட்டை பொறுத்தமட்டில் பதின்மூன்று வகையானோர் விசேட தேவையுடையோராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

http://www.maddunews.com மற்றும் தமிழ்த்தந்தி எனும் பத்திரிகையில் மாற்றுத்திறனாளிகள் சமூக மாற்றத்திற்கு பங்களிப்பு வழங்குவரா? என்ற கட்டுரையில் மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்குகின்ற உள மற்றும் சமூக ரீதியில் எதிர் நோக்குகின்ற சவால்கள், சமூகச் சூழலில் மாற்றத்தினை ஏற்படுத்துவதன் மூலமான மாற்றுத்திறனிற்குட்பட்ட நபர்கள் தன்னிச்சையாக தங்களது தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்ய கூடியவர்களாகவும் மற்றவர்களில் தங்கி நிற்கின்ற நிலையில் மாற்றத்தினை கொண்டுவருபவர்களாக உள்ளனர் என்பது தொடர்பாக கூறப்பட்டுள்ளது.

http://www.tamilcounselling.org பதிவில் மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் சவால்கள் உள சமூக சவால்கள் மற்றும் அவர்களின் தேவைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இவ்வொரு நூல்களும் கட்டுரைகளும் தமக்குரியவகையில் தமது தேவைக்காக வெளியிடப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளின் விஷேட தேவை, அவர்களது தன்மை, சவால்கள் என்பன பற்றியே உள்ளது. தவிர மாற்றுத்திறனாளிகளின் திறன் வெளிப்பாட்டில் கலைப்படைப்புக்கள், அதன் தேவை, கொண்டாட்டம் பற்றி ஆய்வு செய்யப்படவில்லை. இவ்வாய்வினூடாக அவை நோக்கப்படுகிறது.

**பொருளும் ஆய்வுமுறையியல் (Material and Methodology)**

இவ்வாய்வில் விபரண முறையியல், பங்குகொள் முறையியல் (Participatory research Method), கள நிலை அணுகுமுறை (Field orientated approach), என்பன பயன்படுத்தப்பட்டு பண்புசார் (Quality) முறையிலேயே அணுகப்படுகின்றது.

முதல் நிலைத் தரவு: மாற்றுத்திறனாளிகளை தொடர்ச்சியான செயற்பாட்டு ஆய்வில் மாணவர் குழுவினருக்கு ஆய்வாளரினால் பயன்படுத்தப்பட்ட கலைச் செயற்பாடுகள் (கைப்பணி பொருட்கள் உருவாக்கம், ஓவியம், இசை, நாடகம், நடனம், இலக்கியம், நகைச்சுவை, கணனி வடிவமைப்பு) ஊடாக பயிற்சி வகுப்புக்கள், விளையாட்டுக்கள், பயிற்சி பட்டறை என்பதன் ஊடாக பெற்ற அனுபவங்களும் மேலும் பெற்றோர்கள், பொறுப்பாளர்கள், ஆசிரியர்கள், மாற்றுத்திறனாளிகளின் கல்வி தொடர்பாக கல்வியல் கல்லூரியில் தேர்ச்சி பெற்ற போதனா ஆசிரியர்கள், கலைச் செயற்பாட்டு ஈடுபாட்டாளர்கள், வைத்தியர், செவிலியர், ஆலோசகர், பேச்சு மொழி சிகிச்சையாளர், மாணவர்களுடன் மற்றும் ஏனையோருடன் நிகழ்த்திய உரையாடல்கள் வாயிலாக பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் பெற்ற தகவல்களும் நேர்காணல், கலந்துரையாடல், அவதானித்தல் மூலமாக பெற்ற தகவல்களும் இதனுள் பிரதானமாக இவை ஒவ்வொரு நூல்களும் கட்டுரைகளும் தமக்குரிய வகையில் தமது தேவைக்காக வெளியிடப்பட்டுள்ளது.

இரண்டாம் நிலைத்தரவானது சிறுவர் உளவியல் தொடர்பான நூல்கள், பங்குகொள் தொடர்பான நூல்கள், மாற்றுத் திறன்களைக் கொண்ட சிறுவர்களின் கலை தொடர்பான நூல்கள், சட்டங்கள், மாற்றுத்திறனாளிகள் சார்ந்த தெளிவான விளக்கங்கள், இணையம் என்பவற்றின் ஊடாக ஆதாரம் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாய்வின் நோக்கம்: கலைப்படைப்பாக்கச் செயற்பாட்டினூடாக மாற்றுத்திறனாளிகளின் கலைத்திறன் வெளிப்பாட்டை வெளிக்கொணரலாம் என உணர்த்துதல்.

**மாற்றுத்திறனாளி சொற்பதத்தின் தெளிவு பற்றிய தேடல்**

இன்று ஊனமுற்றோர் அல்லது வலுவற்றோர் எனும் பதமானது அகராதிகளில் “மாற்றுதிறனாளிகள் என்ற பதத்தினால் பிரதியீடு செய்யப்பட்டுள்ளது. உலக நாடுகளைப் பொறுத்தவரையில் உடல், உள, ரீதியான குறைபாடு காரணமாகத் தமது வாழ்வியல் தேவைகளைச் சுயமாக எதிர் கொள்ள முடியாதவர்களே

''மாற்றுத்திறனாளிகள்'' எனச் சட்ட ரீதியாகக் கருதப்படுகின்றனர். (இலங்கை கைச்சாத்திடப்பட்ட மாற்றுத்திறனாளி நபர்களின் உரிமைக்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தம் 2007, பக்……..)

ஆரம்பத்தில் இவர்கள் ஊனமுற்றவர்கள் அங்கவீனமானவர்கள் என்றும் வலது குறைந்தவர் என்றும் அழைக்கப்பட்டார்கள். இப் பதங்கள் இவர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டி சமூகத்திலிருந்து இவர்களை புறந்தள்ளுவதற்கு ஒரு காரணமாக அமைந்து விடக்கூடாது என்பதற்காகவும் விஷேட தேவையுடையோர் என்றும் அழைக்கப்பட்டனர். இதுவும் தவறுதலான புரிதலுக்கு வழிவகுத்ததன் விளைவாகவே மாற்றுத்திறனாளி (Differently abled) என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. இப்பதம் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் மாற்றுத்திறன் என்ற சொல்லுக்குள் தமிழில் பல பொருள் பொதிந்திருந்தாலும் சொல்லின் வெளிப்படுகையில் அவர்களை எம்மிடமிருந்து பிரித்து பார்ப்பதற்கான ஒரு சொல்லாகத்தான் அமைகின்றது. ஆனால், அவர்களிடம் இருந்து வெளிப்படும் திறன்கள் எம்மிருந்து அவர்களை பிரித்துப் பார்க்க முடியாத ஒன்றாகவே தான் காணப்படுகின்றது. (சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு: 2003 ''இலங்கைக்கான வலது குறைவு பற்றிய தேசியக் கொள்கை'' பத்தரமுல்ல. இலங்கை)

இவர்கள் உடலிலோ அல்லது மனதிலோ ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக அவர்களால் சில செயல்களை செய்யமுடியாமல் போய்விடுகின்ற காரணத்தினால் அவர்களை நாம் 'மாற்றுத்திறனாளி' என்று அழைக்கின்றோம். இப்பெயரின் பொருத்தப்பாடு பற்றிய தேடலும், ஆய்வும் அவசியம். இச் சொல் அவர்களை எம்மிடம் இருந்து பிரித்துப் பார்க்கக் கூடியது என்பதும் கவனத்திற்குரியது.

**மட்டக்களப்பில் இயங்கும் புகலிடம் பற்றிய ஓர் அறிமுகம்**

2019 ஆண்டு புள்ளிவிபரம்படி மட்டக்களப்பு மாவட்டத்துக்கு உட்பட்ட மாற்றுத்திறனாளிகளின் நிலையங்களை நோக்கும் போது மொத்தமாக 18 மாற்றுத்திறனாளிக்கான நிலையங்கள் காணப்படுகின்றன. இதில் இவ்வாய்விற்குட்பட்ட புகலிடமானது சமுதாய மட்டத்தில் மாற்றுத்திறனுடையவர்களை இணங்கண்டு அவர்களை சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளச் செய்து அவர்களுடைய திறமைகளை வெளிக்காட்டும் நோக்குடன் அவர்களை மேம்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்வதோடு சுயமாகச் செயற்பட வைத்தல் இனிமேலும் மாற்றாற்றல் ஏற்படாவண்ணம் ''வருமுன் காப்போம்'' நடவடிக்கை மேற்கொள்ளல், மாற்றுத்திறனுடையோரை உள்வாங்கல் கல்வி, கல்வி நடவடிக்கைகள் ஊடான தொழிற்பயிற்சி, தொழில் முயற்சிகள் ஆகியவற்றில் அவர்கள் பங்கேற்பை உறுதிப்படுத்தும் விதத்தில் உள்வாங்கச் செய்து அவர்கள் உரிமையைப் பாதுகாத்தல் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மட்டக்களப்பு பிரதேசத்தில் வாழும் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாக ''மெதடிஸ்த திருச்சபை புகலிடம் நிறுவனம்'' 28 வருடங்களாக இயங்கி வருகின்றது. இது 1991ல் 15 மாற்றுத்திறனாளிகளுடன் ஆரம்பிக்கப்பட்டு 2001 வரை மாற்றுத்திறனுடையவர்கள் ஒரே கூரையின் கீழ் தங்கி வாழும் வதிவிடம் சார்ந்த திட்டமாகவே செயல்படுத்தப்பட்டு அவர்களுக்கான கல்வியும் திறன் விருத்திக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வந்தது. 2001 இலிருந்து இன்று வரை 06 பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் 91 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி 5 நிலையங்களையும் 7 விஷேட கல்வி அலகுகளையும் கொண்டு செயற்பட்டு வருகிறது. இந்நிலையங்கள் போரதீவு, களுதாவளை, ஆரையம்பதி, செங்கலடி, இலுப்படிச்சேனை, ஆகிய பிரதேசங்களிலும் விஷேட கல்வி அலகுகளாக வாழைச்சேனை புதுக்குடியுருப்பு வாணி வித்தியாலயம், சித்தாண்டி, வந்தாறுமூலை, மட்/ககு/ முஸ்லிம் மகா வித்தியாலயம், செங்கலடி மட்/ ககு/ மத்திய கல்லூரி, மயிலம்பாவளி விபுலானந்த வித்தியாலயம், மட்/ஊரணி சரஸ்வதி வித்தியாலயம், மட் /பட் /களுதாவளை இராமகிருஸ்ண வித்தியாலயம், மட் /பட் /மகிளூர்முனை சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் இயங்கி வருகின்றது. (மெதடிஸ்த திருச்சபை புகலிடம் 2018 காலாண்டு செய்திமடல், பக்…..)

இன, மத, மொழி, பேதம் இன்றி சகோதரத்துவமாக இத்தன்மையுடைய பிள்ளைகள் பெற்றோரின் அனுமதி, பராமரிப்புடன் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். அவர்களது உள, உடல்சார் மகிழ்ச்சியாக செயற்பாடுகள் வெளிக்கொடுக்கப்பட்டுள்ளன. முடியாது, சாத்தியமற்றது எனும் எதிர் மனப்பாங்குகள் தகர்க்கப்படுகின்றது.

**மாற்றுத்திறனாளிகளின் திறன்களைச் கலைச் செயற்பாடுகள் வாயிலாக முன்னெடுத்தல்**

இவ்வாய்வின் அடிப்படையாகக் கொண்டு ஆரம்பத்தில் புகலிடத்தின் ஒவ்வொரு நிலையங்களுக்குச் சென்று கலைகள் மூலம் ஈடுபடுத்தி செயற்படுத்தப்பட்டது. குறிப்பாக கைப்பணி பொருட்கள் உருவாக்கம், ஓவியம், இசை, நாடகம், நடனம், இலக்கியம், நகைச்சுவை, கணனி வடிவமைப்பு, Photoshop கற்றுக் கொடுப்பதோடு, அவர்களுக்கு தெரிந்த விடயங்களை அவர்களிடம் உள்ள திறமைகளை வெளியில் கொண்டு வருவதற்கான செயற்பாடுகளாகவும் அமைந்தது.

அந்தவகையில் முதலாவது பங்குகொள் ஆய்வாக ஆரையம்பதியிலுள்ள புகலிட நிலையத்தில் ஆரம்பிக்க முடிந்தது. இங்கு மாற்றுத்திறன்களைக் கொண்ட மாணவர்கள் 13 பேர் கல்வி கற்கின்கின்றனர். இவர்களில் மூளைவாதம், கண் தெரியாதவர்கள், காது கேளாதவர்கள், டவுன்சின்ட்ரம், நடக்க முடியாதவர்கள், வாய் பேச முடியாதவர்கள், அதீத செயற்பாடு கொண்ட மாணவர்கள் காணப்படுகின்றார்கள். இவர்களிடம் அதிகளவிலான திறன்கள் காணக்கூடியதாக இருந்தது.

மாற்றுத்திறனாளிகளின் கலையாக்க செயற்பாடுகள் பயிற்றப்படும் போது அவர்களிடத்தில் உள்ள கலையாக்க செயற்பாடுகள் ஒவ்வொன்றும் பிரமிக்கவும் அதே போல் அவர்களிடம் இவ்வாறான திறமைகள் உள்ளதா? என்பதிற்கான பதில்களை நேரடியாக அறியக் கூடிய வகையிலும் அமைந்தது. அந்தவகையில் அவர்களிடம் உள்ள கலையாக்க செயற்பாடுகளைப் பார்க்கின்ற போது பனை ஓலையினால் செய்யப்படும் கைப்பணி பொருட்கள், நாளாந்த பயன்பாட்டிற்கு உதவும் பொருட்கள் சார்ந்த கைப்பணிப் பொருட்கள் செய்கின்றமையை முன்னிலைப்படுத்தலாம். இக் கலையாக்க செயற்பாடுகளில் வாய் பேச, காது கேளாதவர்கள், மெல்லக்கற்போர் ஈடுபாடு கொண்டவர்களாக காணப்படுகின்றார்கள். எதிர்காலத்தில் இவர்கள் தமது வாழ்க்கையைச் சுயமாக நடாத்திக் கொள்வதற்கு வழிகிடைக்கின்றது. இப் புகலிட அமைப்பினால் ஒவ்வொரு மாற்றுத்திறன் பிள்ளைகளுக்கு எத்துறையில் ஈடுபாடு உள்ளது என ஆராய்ந்து அவர்களுக்கு அத்துறையில் பங்குகொள்ள வைத்து அதன் ஈடுபாட்டை ஏற்படுத்திக் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் பின்புலத்தில் ஆய்வாளர்களின் செயற்பாடுகளாக ஏற்கனவே கைத்தொழில்த்துறை திணைக்களத்தில் கைப்பணிப் பொருட்கள் உற்பத்தி தொடர்பாக ஒரு மாத உள்ளக பயிற்சி அமைந்ததால் இன்று எவ்வாறான பொருட்கள் மக்கள் மத்தியில் அதிகளவில் புழக்கத்தில் உள்ளது என்பதை அறிந்து அது தொடர்பான வடிவமைப்பு, நுட்பங்களைக் கலைவழி மூலம் கற்றுக் கொடுக்கக் கூடிய வாய்ப்பாக அமைந்தது. அதே போல் இவர்களுக்கு கண் தெரியாத, காது கேளாத மாற்றுத்திறன்களைக் கொண்ட மாணவர்களுக்கு சைகை மூலமாகவும் பயிற்றுவிக்கப்பட்டது. அத்துடன் அங்கு வருகை தந்த அட்டாளைச்சேனை கல்வியல் கல்லூரி ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டினூடாக அவர்களின் அனுபவத்தின் வாயிலாக கூறுவதாவது மெல்லக் கற்போர் மாற்றுத்திறனாளிகளின் கலைச்செயற்பாட்டின் ஈடுபாடானது அவர்கள் கற்றுக் கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டாலும் அதனை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற உறுதி அவர்களிடம் இருப்பதால் அவர்களுக்கு ஏற்ற வகையில் கலைச்செயற்பாடுகள் மூலம் கற்பித்தல் முறை அமையவேண்டும் என்னும் விரிவாக்கமும் ஏற்பட்டது.

ஆரையம்பதி புகழிடத்தில் ஆய்வு மேற்கொண்டதால் மாற்றுத்திறனாளிகளின் கற்றல் செயற்பாடுகளுடன் இணைந்த தொழிற் பயிற்சிகள் செயற்பட்டு வருகின்றது. இங்கு தொழிற் பயிற்சியுடன் தொடர்புள்ள வகையில் பனை ஓலையினால் கைப்பணிப் பொருட்கள் செய்யும் செயற்பாடுகள் காணப்பட்டன. இங்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியர் வாயிலாக செய்து காட்டி மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்றவகையில் கற்பிக்கப்படுகின்றது. இங்கு பனை ஓலையினால் பின்னல் முறைகள் பயிற்றுவிக்கப்படுகின்றது. பூக்கூடை, தையல் பெட்டி, பூ, இலை, சாப்பாட்டுக் கூடை, சதுரக் கூடை, வட்டக் கூடை, அடுக்கு தட்டு, தொப்பி, மெக்றம் (தொங்கவிடுவது) இடியப்பத் தட்டு,

பூக் கூடை போன்ற பல உற்பத்திகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. (நேர்காணல்:க.இந்திரா, ஆசிரியர், புகலிட அமைப்பு, ஆரையம்பதி)

இங்கு பனை ஓலையினால் கைப்பணிப் பொருட்கள் செய்யப்படும் செயற்பாட்டில் சாயமூட்டிய ஓலைகள் புகலிடத்திலுள்ள ஒவ்வொரு அமைப்புக்கும் வருவதனால் ஒவ்வொரு பொருளுக்கும் ஏற்றவகையில் அளவுப் பிரமாணத்தில் அடியினைப் போட்டு பின்னும் முறைகளைக் கொண்டு பொருட்கள் செய்யப்பட்டன. இங்கு வளைவான பொருள், விளிம்புடனான பொருள், உச்சிப் பொருள் என பொருளின் வடிவிக்கேற்ப பின்னும் முறைகள் பயிற்றுவிக்கப்பட்டன. நீள்வட்டம், சதுரம், வட்டம், அறுகோணி, ஐங்கோணி, எண்கோணி என பல வடிவிலும் அடியினைப் போடுவதற்கு மாற்றுத்திறன் கொண்ட பிள்ளைகள் விளங்கிக்கொள்ளும் வகையில் பயிற்றுவிக்கப்படுகின்றன. (நேர்காணல்:க.இந்திரா, ஆசிரியர், புகலிட அமைப்பு, ஆரையம்பதி)

ஒவ்வொரு பொருளுக்குமான அளவுப் பிரமாணங்கள் காலத்திற்கும், தேவைக்கும் ஏற்ப வேறுபட்டுக் கொண்டே செல்கின்றன. அந்தவகையில் கலையாக்கச் செயற்பாடுகள் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒவ்வொரு பொருளுக்குமான அளவுப் பிரமாணங்கள் கற்பிக்கப்பட்டதோடு, இன்றைய காலத்தில் அதிகமாக கொள்வனவு செய்யப்படும் பொருட்களுக்கான அளவுகளும், அவ் அளவு வேறுபாடுகளைச் செய்யும் விதம் தொடர்பான மேலதிக அறிவினைக் கொண்டும் மாற்றுத்திறனாளிகளினால் செய்யப்படும் பொருட்களுக்கு ஓர் வழிகாட்டியாக செயற்பட முடிந்தது.

அதே போல் ஆரையம்பதி புகலிட அமைப்பில் கணணி வடிவமைப்பு (Designing, Photoshop) தொடர்பான கற்கைத்துறையை அவர்களுக்கு கற்றுக்கொடுக்கக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு அமைந்தது. எதிர்காலத்தில் அவர்களுக்கென்று ஒரு தொழிலை செய்து அவர்களது வாழ்க்கையை நடாத்துவதற்கு வழியமைக்கப்பெறும் வகையில் வார நாட்களில் இயன்ற அளவு வகுப்புக்களை நடாத்த இப்பங்குகொள் ஆய்வின் விரிவாக்க வெளிப்பாடு ஏற்படுத்தித் தந்தது. இதில் கால் இயவாதவர்கள், பேசமுடியாதவர்கள், டவுன்சின்ட்ரம் என பலர் இதில் ஆர்வம் காட்டுவதோடு, தெரியாத விடயங்களைத் தெரிந்து கொள்ளக் கூடிய ஆர்வம் அவர்களிடம் உள்ளதை தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

HacaDev Social Inovation-2019 “தேசிய இளைஞர் சமூக கண்டுபிடிப்பு சவால்” ஐந்து நாள் பயிற்சி பட்டறை வாயிலாக காது கேளாத வாய்பேச முடியாத மாற்றுத்திறனாளியினால் செய்யப்படும் கணணி வடிவமைப்பு (Designing) தெரிந்துகொள்ளப்பட்டது. அத்துடன் மட்டக்களப்பில் இயங்கும் “Dream Space Academy” யில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களின் செயற்பாடுகள் ஊடாக அறிந்து கொள்ள முடிந்தது.

செங்கலடி புகலிடத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளில் டவுன்சின்ட்ரம் எனும் வகையினரைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் இசைத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டவர்களாக இருக்கின்றனர். இவர்கள் இசைக்கு ஏற்ப தாளம் போடும் திறன் சிறப்பானது. இவர்களுக்குத் தோல் வாத்தியங்களைக் கொண்டு சிறு வயதிலிருந்தே பாட்டுக்கு ஏற்றவகையில் தாளம் போட வைத்தல் போன்ற கலை ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுத்திக் கொண்டு அவர்களின் எதிர்காலத்தில் இசைத்துறையில் ஆர்வத்தை ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்கின்றதாக புகலிட இசைக் குழுவிற்கு பொறுப்பான ஆசிரியர் மாலினி அவர்கள் கூறினார். இதற்குச் சான்றாக புகலிடத்து மாணவர்கள் இசைக்குழு செயற்பாடுகள் ஊடாக அறியலாம்.

செங்கலடி புகலிட அமைப்பில் பழைய புத்தகக் கடதாசிகளைக் கொண்டு கைப்பணிப் பொருட்கள் செய்யும் கலைச் செயற்பாடுகள் இங்கு காணப்படுகின்றன. இச்செயற்பாட்டில் மெல்லக் கற்போர், டவுன்சின்ட்ரம் ஆகியோர் அதிக ஈடுபாட்டில் உள்ளவர்களாக உள்ளமை அறிதலுக்குரியது. இங்கு பழைய புத்தகக் கடதாசிகளைக் கொண்டு தண்ணீரில் நனைத்து கோதுமை மாவு பசை எடுத்து நனைத்த பேப்பரில் பூசிப் பின்னர் அச்சுப்போட்டு வெயிலில் நன்றாகக் காய வைத்த பின் இரு துண்டுகளையும் பொருத்தி தைத்து வைற்றிங் பவுடருடன் தண்ணீர் விட்டுக் குழைத்து அதன் மேல் பூசவும் பின் காய வைத்த பின்னர் சைன் பேப்பர் கொண்டு அதனை நன்றாக உரசி பின்னர் மேலால் பழங்களுக்கு ஏற்ப வர்ணம் பூசி அதில் கைபடாமல் காய வைத்து செய்யப்படுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு சிறு சிறு செயற்பாடுகளின் ஒவ்வொரு நாள் அதற்காக ஒதுக்கி

மாற்றுத்திறனாளிகளுக்கு விளங்கும் வகையில் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. (நேர்காணல்: ச.சிவனந்தி, ஆசிரியர், புகலிட அமைப்பு, செங்கலடி)

இவ் வெளிப்பாட்டிற்கு மேலாகப் பழைய கடதாசிகளைக் கொண்டு கடதாசிப்பை செய்வது தொடர்பாக கற்றுக்கொடுக்க முடிந்தது. இச் செயற்பாட்டில் காது, கேளாத வாய் பேசாதவர்களிடம் கைப்பணி, கை வேலைப்பாடுகள் செய்வதில் அதிக ஈடுபாடு கொண்டவர்களாக காணப்பட்டார்கள். இச் செயற்பாட்டின் ஊடாக நாம் ஒரு விடயத்தை கற்றுக் கொடுத்தால் அதனை விரைவாகச் செயற்படுத்திக் கொள்ளும் திறன் அவர்களிடம் காணப்படுவதுடன் மேலதிகமாக அவர்களிடம் உள்ள ஆற்றல்களினால் புதிய நுட்ப முறைகளையும் கொண்டு கற்றுக்கொடுத்த விடயத்திலிருந்து புதிய விடயத்தை செய்யும் திறன் அவர்களிடம் காணப்பட்டது என இப்பங்கொள் ஆய்வுச் செயற்பாட்டின் வாயிலாக அறியக் கூடியதாக இருந்தது.

போரதீவு புகலிடத்தில் பூவாஸ் கழிவுக்கடதாசியினால் செய்யப்படும் அலங்காரப் பொருட்கள் சிரட்டைகளினால் செய்யப்படும் கைப்பணிப் பொருட்கள் போன்றவை சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஊடாக விசேட தேவையுடைய மாணவர்களுக்கு விளங்கக் கூடிய வகையில் செய்து காட்டப்படுவதோடு, அதில் ஈடுபாட்டைக் கொண்டு வருவதற்கான நுட்பங்களும் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கான நுட்ப முறைகள் வெளிநாட்டில் இருந்து வரும் அமைப்புக்கள் இங்கு வருகை தந்து அது தொடர்பான விடயங்களை மாற்றுத்திறன் மாணவர்களுக்கு ஏற்வகையில் பயிற்றுவிக்கப்படுகிறது. இதற்குச் சான்றாக புகலிடத்திற்கு 2019யில் வருகை தந்த சீனாவைச் சேர்ந்த சியோரி யோஷியோகா ''விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான கைகளால் தயாரித்த 2.0 கற்றல்'' என்ற நூலினூடாக விசேட தேவையுடைய மாணவர்களுக்கு ஈடுபாட்டைத் தூண்டும் வகையான கலைச் செயற்பாடுகளை பயிற்சியளித்தார்.

களுதாவளை புகலிடத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட செயற்பாடாக தும்பு பயிற்சியளிக்கும் ஆசிரியர்கள் ஊடாக தும்புக் கைத்தொழில் தொடர்பான உற்பத்தியை மேற்க்கொள்ள பயன்படுத்தும் நுட்பமுறைகளையும் திறன்களையும் வெளிக் கொண்டு வருவதோடு அவர்களுக்கு அது எவ்வாறான நுட்பமுறைகளைப் பிரயோகிக்கும் விதிகள் தொடர்பாகவும் கற்றுக் கொள்ளமுடிந்தது. அத்துடன் விஷேட தேவையுடைய மாணவர்களுடன் இணைந்து கயிறு திரித்தல், கயிற்றினைக் கொண்டு அலங்காரப் பொருட்கள் செய்தல் ஆகிய வேலைப்பாடுகளில் செயற்பட முடிந்தது. தேடல் முயற்சியினால் புதிய நுட்பங்களை கற்றுக் கொடுக்க வாய்ப்பு ஏற்பட்டது.

தும்பிலிருந்தும் தென்னையின் வேறு பாகங்களிருந்தும் பல்வேறு உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு தற்போது சந்தைக்கு விடப்படுகின்றன. வீட்டு அலங்கார பொருட்களாகவும் சுற்றுலா பயணிகளைக் கவரும் கைப்பணிப் பொருட்களாகவும், வீட்டுப் பாவனைப் பொருட்களாகவும் அன்றாட தேவைகளுக்குப் பயன்படும் பொருட்களாகவும், தும்பு உற்பத்தி பொருட்கள் விளங்குகின்றன. கயிறுகள், கால்மிதிகள், தும்புத் தடிகள், தூசி துடைப்பான்கள், பல்வேறு தேவைகளுக்காக பயன்படும் சுவர் அலங்கார பொருட்கள், கூடைகள், பெட்டிகள், நுணுக்கமான வீட்டுப் பாவனைப் பொருட்கள் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நிலையத்தில் இவ்வாறான செயற்பாடுகள் ஊடாக இங்கு கல்வி கற்கும் விஷேட தேவையுடைய மாணவர்களும் தும்புக் கைத்தொழிலில் கைத்தேர்ச்சி பெற்றவர்களாக திகழ்வதோடு, அவர்கள் எதிர்காலத்தில் சுயதொழில் இட்டுச் செல்வதற்குத் துணைபுரிகின்றது. இதற்குச் சான்றாக இங்கு கல்வி கற்ற மாற்றுத்திறனாளி 24 வயதைச் சேர்ந்தவர் இன்று சுயதொழிலாக தும்புத்தடி, தும்பிலான அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றை வீட்டில் செய்து வருகிறார். (நேர்காணல்: புகலிட பழைய மாணவன் தனுஜன்)

மாற்றுத்திறனாளிகளின் கலைச் செயற்பாடுகளில் ஆசிரியர்களின் ஆற்றுகைப்படுத்தல் செயற்பாடுகள் ஊடாக வரவேற்பு இசைக்குழு உருவாக்கி செயற்படுகின்றமை முக்கிய கலைச்செயற்பாடாக அமைகின்றது. இதன் ஊடாக ஒவ்வொரு மாற்றுத்திறனாளிகளின் திறமைகளை வெளியில் கொண்டு வருவதற்கு சிறப்பான செயற்பாடாக அமைகின்றது. அந்தவகையில் டவுன்சின்ட்ரம், காது கேளாதவர்கள், வாய் பேச முடியாதவர்கள், அதீத செயற்பாடு, மெல்லக்கற்போர் என பல வகைப்பட்ட மாற்றுத்திறனாளிகள் இக்குழுவில்

பங்குகொள்வதோடு, பல கலை நிகழ்ச்சிகளில் இன்றுவரை அவர்களது திறமைகளைக் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வாய் பேச காது கேளாதவர்களுக்கு நடனத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டபவர்களாக காணப்படுகிறார்கள். இவர்கள் ஆற்றுகை செய்யும் போது இவர்களுக்கு முன் நின்று ஆசிரியர்கள் செய்கை வாயிலாக ஆடவைக்கின்றனர். புகலிட நடன ஆசிரியர் அனிட்டா அவர்கள் கூறும் போது வாய் பேச, காது கேளாதவர்களுக்கு இசைக்கு ஏற்ற வகையில் நடனம் ஆட முடியாததால் அவர்களுக்கு விளங்கும் சைகை முறையான செயற்பாட்டின் வாயிலாக கிட்டத்தட்ட 5 நாள் இச் செயற்பாட்டை தொடர் ஆற்றுகை செயற்பாட்டின் ஊடாக மாணவர்களிடம் இருந்து நடன கலைத்திறமையை கொண்டு வரலாம். ஆனால் டவுன்சின்டரம் வகை மாணவர்களுக்கு நடனம் ஆடும் திறமை, பாட்டுக்கு ஏற்ற முகபாவனை செய்யும் ஆற்றல் இருந்தாலும் தாளத்திற்கு ஏற்ப ஆடுவது சிரமம் உள்ளது (நேர்காணல்: 2019) என்றார்.

**மாற்றுத்திறனாளிகளை கலைச் செயற்பாடுகள் வாயிலாக சமூக ரீதியில் வலுப்படுத்தல்**

மாற்றுத்திறன் கொண்ட பிள்ளைகளின் கலைச் செயற்பாடுகள் தொடர்பான திறமைகளை வாணிவிழா, ஒளிவிழா, சிறுவர் தின விழா, கண்காட்சி, கலைவிழா, செயலமர்வுகள் மற்றும் அவர்களுக்கான பாடசாலைப் போட்டிகள் ஊடாக வெளிப்படுத்துகிறது. அந்தவகையில் இவ்வருட சிறுவர் தின விழா 2019 மட்டக்களப்பு நகராட்சி மண்டபத்தில் மிக பிரமாண்டமாக இடம்பெற்றது. இச்சிறுவர் நிகழ்சியை பார்வையிடுவதற்காக இப்பாடசாலை சிறார்கள் இவர்களின் பெற்றோர்கள் மற்றும் இப்பாடசாலை ஆசிரியர்கள் இப் பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் சிறப்பித்தனர். இந்நிகழ்வில் சாதாரண மாணவர்களை விட அவர்களின் திறமைகளை நாடகம், இசை, நடனம் போன்ற பல கலைநிகழ்சிகள் வாயிலாக மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.அதேபோன்று 2019யில் கிழக்கு பல்கலைக்கழகத்தில் சுயதொழிலை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களிடத்தில் உள்ள திறமைகளின் ஊடாக வெளிக்கொணர்ந்த கைப்பணிபொருட்களை காட்சிப்படுத்தி சமூகத்தின் பார்வைக்கு கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இக்கலைச் செயற்பாடுகள் தொடர்பாக பாடசாலை மட்டத்தில் இடம்பெறும் பெரா, எஸ்கோ, தேசிய கலாச்சார போட்டிகள் மற்றும் கச்சேரி தேசிய ரீதியான போட்டிகளில் பங்குபற்றி அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (மெதடிஸ்த திருச்சபை புகலிடம் 2018 காலாண்டு செய்திமடல்) அத்துடன் சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகையில் மாற்றுத்திறன்கொண்ட மாணவர்களின் கலைச்செயற்பாடுகள் ஊடாக உளவியல் ரீதியில் ஆற்றுப்படுத்தல் என்ற தொனிப்பொருளில் Humaity & Inclusion Community என்ற அமைப்பின் மூன்று நாள் வதிவிட செயலமர்வின் வாயிலாக 2019.09.29 யில் மடட்டக்களப்பு சர்வோதாயவில் இடம்பெற்றது. இதில் புகலிட மாணவர்களின் தங்களது கலைச் செயற்பாடுகளை உளவியல் ரீதியில் ஆற்றுகைப்படுத்தப்பட்டது எனலாம். இவ்வாறு பல்வேறு கலைச் செயற்பாடுகள் வாயிலாக மாற்றுத்திறனாளிகளை சமூக ரீதியில் வலுப்படுத்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனலாம்.

**முடிவுரை (Conclusion)**

மாற்றுத்திறனாளிகளை சமூக ரீதியில் இனங்கண்டு அவர்களை கலை செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அதனுடாக பல கலை தொடர்பான ஈடுபாட்டினை ஊக்கப்படுத்தி அவர்களிடம் மறைந்திருக்கும் கலைகளை வெளிக் கொணர்ந்து மாற்றுதிறன் உடைய சமூகத்திடம் இயல்பான ஒரு நிலையினை, புரிதலை ஏற்படுத்துவதற்கு முதலில் புரிந்து கொள்ளவும் அதனுடன் சிந்திக்கும் உணர்வையும் ஏற்படுத்த வழிவகுக்கச்செய்துள்ளது. மற்றவர்களுடனான கலை வெளிப்பாடுகளை தரவுகளாக சேகரித்தல் போன்ற விடயங்கள் எதிர்காலத்தில் இவர்களைப் போன்ற திறனுடையவர்களை முன்னேற்ற வழிவகுக்கும். ஆளுமையுள்ள படைப்பாற்றல் நிறைந்தவர்களாக ஆக்கி மகிழ்ச்சியை இச்செயற்பாடு ஆக்கியுள்ளதோடு, சொந்தக்காலில் நின்று தொழில் செய்வதற்குமான தொழில் முனைவையும் ஏற்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை நூல்கள்**


1. இலங்கை திறந்த பல்கலைக்கழகம், (2010), **“விசேட தேவைகள்சார் கல்விக்கான பல்துறைஅணுகுமுறைகள”**, நாவல, நுகேகொட.
2. சுமதி மகேந்திர, (2012), **“சமூகமயமாக்கல் குடும்பமும் மற்றும் பாடசாலையின் பங்கு”,** சஜி வெளியீட்டகம்.
3. அப்புள்ளாச்சாரி.கி.ர, (2006), **“குழந்தை உளவியல்”**, சாந்தா பப்ளிஷர்ஸ்,சென்னை
4. பாலசுப்பிரமணியம் தனபாலன், (2009), **“பாலர் கல்வியும் நவீன செல்நெறிகளும்”,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
5. மகேசன்.கே, 2010, **“விசேடகல்வியும் ஆலோசனை வழங்கலும்”,** ஹிரா அச்சகம், ஏறாவூர், மட்டக்களப்பு.
6. கோகிலா.ம உம் தயா. சோ, 2005, **“மகிழ்வுடன் வாழ்தல்”**, இலங்கை ஜேர்மன் அபிவிருத்தி ஒத்துழைப்பகம், கல்வியமைச்சு, தேசிய கல்வி நிறுவகம்.
7. சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு, 2003, “**இலங்கைக்கான வலது குறைவு பற்றிய தேசியக் கொள்கை”** பத்ரமுல்லை, இலங்கை.
8. **“வலதுகுறைவுடைய சிறுவர்களையும் இளையுர்களையும் உள்வாங்குதல் தொடர்பான கைநூல்”** (அனைவருக்கும் விளையாட்டு) 2013, ஹண்டிகப் இண்டர்நெஷனல் ஸ்ரீலங்கா.
9. இலங்கை கைச்சாத்திடப்பட்ட மாற்றுத்திறனாளி நபர்களின் உரிமைக்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தம் 2007.


**English Books**


1. “the social Work Exprince”merry ann Suppes Carolyn Wells (pages -390-403,mental Retardation,autism palsy,hearing problem,learning disabalities)
2. “councling and Social support” Richard E.Pearson.


**நேர்காணல்**

1. அமலன், வயது 38, புகலிட இணைப்பாளர், கல்லடி, 2019.
2. அருட்திரு.எஸ்.எஸ் ரெரன்ஸ் ஐயா, வயது 65, புகலிட நிர்வாக பணிப்பாளர், மட்டக்களப்பு.
3. தயானந்தன், வயது 50, மட்டக்களப்பு விசேட கல்வி பிரிவு, வலயக்கல்வி பணியகம் மட்டக்களப்பு.
4. கிருஸ்னமூர்த்தி, வயது 55, மட்டக்களப்பு உளவியல் ஆலோசனைப்பிரிவு வலயக்கல்வி பணியகம் மட்டக்களப்பு.
5. காண்டிபன், வயது 42, மென்கெப் இணைப்பாளர், மட்டக்களப்பு,
6. சந்திரகலா, வயது 40, சமூக சேவை பிரிவு உத்தியோகத்தர், கச்சேரி மட்டக்களப்பு.
7. லியோன், வயது32, கென்டிகெப் இன்டனெஷனல் அமைப்பு, மட்டக்களப்பு.
8. மாலினி, வயது 29, ஆசிரியர், புகலிட அமைப்பு, களுதாவளை, 2019.
9. இந்திரா, வயது 32, ஆசிரியர், புகலிட அமைப்பு, ஆரையம்பதி, 2019.
10. சிவனந்தி, வயது 39, ஆசிரியர், புகலிட அமைப்பு, செங்கலடி, 2019.
11. போரதீவு, வயது 31, ஆசிரியர், புகலிட அமைப்பு, போரதீவு, 2019.
12. கீதா, வயது 38, ஆசிரியர், புகலிட அமைப்பு, இலுப்படிச்சேனை, 2019.
13. அனிட்டா, வயது 45, ஆசிரியர், புகலிட அமைப்பு, சித்தாண்டி, 2019.
14. அருணா, வயது 42, ஆசிரியர், புகலிட அமைப்பு, வாழைச்சேனை, 2019.
15. கலீல்,வயது 55,விசேட கல்வி பேராசிரியர் லாஹிர், கல்வியல் கல்லூரி அட்டாளைச்சேனை.

16. கயல்விழி,வயது 26, விசேட கல்வி ஆசிரியர், கல்வியல் கல்லூரி அட்டாளைச்சேனை.
17. சியோரி யோஷியோகா,வயது 32,விசேட கல்வி ஆசிரியர், சீனா.

சஞ்சிகைகள்

1. மெதடிஸ்த திருச்சபை புகலிடம் 2018 காலாண்டு செய்திமடல்.
2. மெதடிஸ்த திருச்சபை புகலிடம் 2019 காலாண்டு செய்திமடல்